RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2222

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

# இந்துப் பண்பாட்டு மரபில் சோமாஸ்கந்த மூர்த்தம் ஓர் ஆய்வு

அ. வியாசன் [அ, *]

[அ] இந்து நாகரிகத்துறை, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், வடமாகாணம், இலங்கை

# A study of the Somaskanda Murtham in the Hindu cultural tradition

A. Viyasan [a, *]

[a] Department of Hindu civilization, Faculty of Hindu studies, University of Jaffna, Jaffna, Northern Province, Sri Lanaka.
*Corresponding author Email: viyasan95@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2222
Received: 04-09-2021; Revised: 12-05-2022; Accepted: 15-05-2022; Published: 19-05-2022

**Abstract:** Semaskanda Murtham is a form of expression of elements of the Hindu cultural tradition such as religion, art, science, philosophy and faith. The sages who are special to Lord Shiva are one of the three sages Somaskanda Murtham is one of the sixty-four Shiva deities worshiped by vegetarians. This study is titled Somaskanda Murtham a Study in the Hindu Cultural Tradition, with the aim of highlighting the importance of Somaskanda Murtham in the Hindu Cultural Tradition. This study is carried out with the aim of exploring the theory. Somaskanda Moortham Historical and theoretical ideas have been the basis of this study since antiquity. This study forms a descriptive study. Performed with analysis, comparison and historical analysis when appropriate. This study clarifies the philosophy of Somaskandar Murtham, Somaskandar Murtham in literature, Somaskandar Murtham in Agama, Somaskanda Murtha portrait structure, Somaskanda sculptures. It is hoped that such research and their findings will help to illustrate the present and future generations.

**Keywords:** Uruvathirumeni, Murtham, Hindu Temple, Somaskanda Murtham, Hindu Culture

## முன்னுரை

இந்துப் பண்பாட்டு மரபில் சோமாஸ்கந்த மூர்த்தம் மிக முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. அறுபத்து நான்கு சிவ உருவத்திருமேனிகளில் ஒன்றாக சைவ சமயத்தவர்களால் வணங்கப்படும் வடிவமாக சோமாஸ்கந்த மூர்த்தம் விளங்கின்றது. சிவன், பார்வதி சமேதராக தங்களின் குழந்தையான கந்தனுடன் காட்சியளிப்பதைச் சோமாஸ்கந்தர் என்று அழைக்கப்படுகிறது. இவ் மூர்த்தம் அறுவகை சமயங்களின் செல்வாக்கினை வெளிப்படுத்துவாக அமையப் பெற்றுள்ளது. அதாவது சைவம் - சிவன், சாக்தம் - பார்வதி, கௌமாரம் - கந்தன் ஆகியவற்றின் பிரதானத் தெய்வங்கள் இடம்பெற்றுள்ளன. இறைவனின் உருவத்திருமேனிகள் மகேஸ்வர மூர்த்தங்கள் என்றழைக்கப்படுகின்றன. மகேஸ்வரத்திருமேனிகள் இருபத்தைந்தாகும். இவை வியத்தலிங்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. சோமாஸ்கந்தர் என்பது வடமொழிச் சொல் ஆகும். தமிழில் "இளமுருகு உடனுறையும் அம்மையப்பார்" என்றும் "குழந்தை நாயகர்" என்றும் கூறுவர் (Ramakrishnan, 2010). வியத்த என்ற சொல்லுக்கு வெளிப்பட்டு விளங்குவது என்பது பொருள். இத்திருமேனிகள் போகவடிவம், யோகவடிவம், வேகவடிவம் என்று மூவகைப்படும். போகவடிவம் உயிர்களுக்கு உலக இன்பத்தை வழங்கும் பொருட்டு மணக்கோலம் கொண்டிருப்பது. யோகவடிவம் இறை இன்பம் வேண்டுபவர்களுக்கு ஞானத்தை வழங்கும் பொருட்டு ஞானாசிரியர் கோலம் கொண்டு இருப்பது. வேகவடிவம் என்பது இறைவனை நினைத்து வழிபடும் அன்பர்களின் துயரத்தை நீக்கும் பொருட்டு போர்க்கோலம் கொண்டு விளங்குவது. இவற்றுள் சோமாஸ்கந்த மூர்த்தம் போக மூர்த்தம் ஆகும்.

## சோமாஸ்கந்தர் மூர்த்தம் உணர்த்தும் தத்துவம்

"சத்து", "சித்து" மற்றும் "ஆனந்தம்" என்ற (சச்சிதானந்தம்) மூன்று நிலைகளைக் குறிப்பதாகவும் சிவன், பார்வதி மற்றும் முருகன் என்ற மூவரும் "இச்சா சக்தி", "கிரியா சக்தி" மற்றும் "ஞான சக்தி"-களை வெளிப்படுத்தும் தோற்றங்களைத் தருவதாக சோமாஸ்கந்த வடிவம் திகழ்கின்றது. குழந்தை முருகனை மடியில் வைத்துக் கொண்டபடி தோற்றம் தரும் சிவன், பார்வதி என்பவர்கள் இந்த உலகின் பெற்றோர்களை எடுத்துக் காட்டுவதாக உள்ளனர். "அருமையில் எளிய அழகே போற்றி" என்ற திருவாசக வரியின் உட்பொருள் இவ்வடிவே என்பர் ஆன்றோர். உண்மையும், அறிவாகிய நன்மையும் சேர்ந்தால் கிடைப்பது இன்பம் என்பதை இக்கோலம் எடுத்துக்காட்டுகிறது (Ramakrishnan, 2010).

சுத்தாத்து வித சித்தாந்திகளின் முத்தி நிலையைக் காட்டுகிறது. "ஆன்மா இறைவனின் சத்தியாகிய பெருங் கருணை வசப்பட்டு இறைவனை அடைந்து ஒருபுறம் இறைவனும், மறுபுறம் இறைவியுமிருக்க, வேறு ஒன்றையும் காணுது இறைவனையே சதா தரிசித்துத் தன்னை மறந்து நிற்கிறது. இறைவனும் இறைவியும் ஒன்று ஆகையால், இறைவனையே அன்றி வேறெதையும் அறியாது இறைவனில் ஒன்றுபட்டு நிற்கிறது திருவருள் பதிந்த ஆன்மா என்பதனையே இத்திருஉருவக் காட்சி நமக்கு உணர்த்துகின்றது.

முப்புரமெரித்தல் என்பது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் எரித்தலாம்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்

முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்

முப்புர மாவது மும்மல காரியம்

அப்புர மெய்தமை யாரறி வாரே"

எனும் திருமந்திரப் பாடல் இதை விளக்குகின்றது (Vasantha Kumar, 2016). இறைவன் ஆன்மாக்களின் மலத்தை நீக்கும் பொருட்டுத் தனு, கரணம், புவனம் முதலியவற்றை உண்டாக்கி, அவை மூலமாக மலத்தை நீக்குதல் என்பதை சகல உலகினையும் தேராக்கி, அதில் சென்று முப்புரமெரித் தார் என்பதிலிருந்தும், அதனால் மூன்று மலங்களும் நீங்கப்பெற்ற ஆன்மா தேரில் வீற்றிருக்கும் சோமாஸ்கந்த மூர்த்தத்தில் கந்தரின் (முருகனின்) நிலையை அடைவதிலிருந்தும் விளங்குகிறது.

## இலக்கியங்களில் சோமாஸ்கந்தர் மூர்த்தம்

குமார சம்பவம் என்ற அற்புதமான காவியத்தை இயற்றிய காளிதாசன், உலகத்துக்கே பெற்றோர்களைப் போல (ஜகத்குரு) இருக்கும் வகையில் அந்தத் தோற்றத்தைத் தருகிறார்கள் என எழுதி உள்ளார். குமரகுருபரர் தன்னுடைய நூலான 'பிறப்பான் திரட்டு" என்பதில் அந்த மூன்று உருவங்கள் சத்வ, தமஸ், மற்றும் ராஜாஸ் என்ற மூன்று குணங்களையும் குறிப்பிடுவதாக எழுதி உள்ளார். ஆகவே சோமாஸ்கந்தனின் அமைப்பு சிவன் - பார்வதியின் அம்சமாக உள்ள முருகனின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்து உள்ளது.

சோமாஸ்கந்தர் மூர்த்தம் பற்றிய வரலாற்று சிறப்பினை கந்தபுராணத்திலே கண்டு கொள்ளமுடிகிறது. திருமால் மகப்பேறின்மையால் சிவனை நோக்கி ஒர் ஊழிக்காலம் கடுந்தவம் செய்தார். சிவபெருமான் உமாதேவியாரோடு தோன்றியருளினர். திருமால் அவரை வணங்கி வழிபட்டர், சிவபெருமான் அவருக்கு மகப்பேறுகிடைக்க வரம் அருளினர். அப்பொழுது உமாதேவியார் தன்னை வணங்காத திருமாலை நோக்கி, நீ பெறும் மகன் எம் பெருமான் கோபத்தால் விரைவில் அழிவான் என்று சினந்து சாபமிட்டார். திருமால் அதனைக்கேட்டு மிகவும் வருந்திச் சாபவிமோசனம் வேண்டி சிவபெருமான், உமாதேவியார், முருகக்கடவுள் ஆகிய மூவரையும் ஒருங்கே கொண்ட சோமாஸ்கந்தமூர்த்தியின் திருவுருவத்தை அமைத்து வழிபட்டு வந்தார். பல ஆயிரம் கோடி ஆண்டுகள் கடுந்தவம் இருந்தார். அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாரோடு தோன்றியருளி, உமையை நோக்கி, திருமாலுக்கு அருள்புரிக என்றார். உமையும் திருமாலின் பத்தியைப் பாராட்டி, நீ பெறும் மகன் முன் சாபப்படி இறப்பினும் பின்னே உயிர்பெற்றெழுவான் என்றருளினர். பின்னே திருமால்

திருப்பாற்கடலில் பள்ளிகொண்டு தன் நெஞ்சகத்தில் சோமாஸ்கந்த மூர்த்தியின் திருவுருத்தை வைத்து வழிபட்டு வந்தார். தேவேந்திரன் பின்னர் அம்மூர்த்தியைத் திருமாலிடம் பெற்று வழிபட்டு வந்தான். மண்ணுலகை ஆண்டு வந்த முசுகுந்தச் சக்கரவரத்தியின் உதவி, வலன் என்னும் அவுணனை அழிக்க இந்திரனுக்குத் தேவைப்பட்டது. சங்காரம் முடிந்தவுடன் முசுகுந்தனுக்குச் சன்மானம் செய்ய எண்ணிய இந்திரன் என்னவேண்டுமோ கேள் தருகின்றேன் என்றார், தியாகேசராகிய சோமாஸ்கந்தமூர்த்தி முன்பே முசுகுந்தனிடன் அறிவித்திருந்த படி முசுகுந்தன் சோமாஸ்கந்தமூர்த்தியைத் தனக்குத்தரும்படி விரும்பிக் கேட்டான். தேவேந்திரன் திருமாலிடம் பெற்று வந்த மூர்த்தியாதலால் திருமாலிடம் தெரிவிக்கிறேன் அவர்தரச்சொன்னல் தருகிறேன் என்று பதில் கூறினார். திருமாலின் அனுமதியின் படி முசுகுந்தச்சக்கரவர்த்தி தேவேந்திரனிடம் வந்து தெரிவிக்க இந்திரன் வழிபட்டுவந்த சோமாஸ்கந்த மூர்த்தியைக் கொடுக்கமனமில்லாது அதேபோன்று ஆறு மூர்த்திகளைத் தெய்வத்தச்சனைக் கொண்டு செய்வித்து, முசுகுந்தனிடம் ஒவ்வொன்றை கொடுக்க முசுகுந்தான் இறைவனருளால் அவ்வாறையும் வாங்கி இவர் அவரல்லர் என்று கூற, இந்திரன் வேறுவழியில்லாமல் இதுகாறும் வழிபட்டு வந்த சோமாஸ்கந்த மூர்த்தியை அளித்து திருவாரூர் முதலான தலங்களில் இவ்வெழுவரையும் வைத்துப் பூசிப்பாயாக! என்று விடைகொடுத்து அனுப்பினன் என்று கந்தபுராணம் குறிப்பிடுகிறது.

“ஏலவார் குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞாலமேலுறும் இரவோடு பகலுக்கும் நடுவே
மாலையானதொன்று அழிவின்றி வைகுமாறதொக்கும்” (Subramania Sastrigal, 1984)

இரவு பகல் என்று இருந்தாலும் இரண்டும் சேர்ந்து நாள் என்று ஆவது போல பகலையும் இரவையும் இணைக்கும் மாலைப் பொழுதாக முருகன் இருக்கின்றான் என்று கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணத்தில் பாடுகின்றர். மூவரும் இணைந்து சிவமூர்த்தமாக ஒன்றாக அருள் பாலிக்கின்றனர்.

## ஆகமத்தில் சோமாஸ்கந்தர் மூர்த்தம்

ஆகமத்திலும் சோமாஸ்கந்தமூர்த்தி அமைப்பு முறைப்பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ தத்வநிதி என்ற நூல் சோமஸ்கந்தன் இரண்டு கைகளைக் கொண்ட குழந்தையாகவும், பத்மாக்களை வைத்து உள்ளபடியும் இருக்க வேண்டும் என்று கூறுகின்றது. காசியப சில்ப சாஸ்திரம் உட்கார வேண்டிய முறை, நிற்கும்போது, நாட்டியம் ஆடும்போது போன்ற நேரங்களில் இருக்க வேண்டிய முக பாவங்களைக் காட்டுகின்றது. சிலை நிர்வாண கோலத்தில் உள்ளபோது சன்னவீராவை அணிந்து கொண்டு இருக்க வேண்டும். வலது கை சுகி முத்திரையைக் காட்டிக் கொண்டு இருக்க வேண்டும். சில்பரத்தனா என்ற நூலின்படி இரண்டு கைகளில் ஒன்றில் பூவையும், அல்லது வரத முத்திரையைக் காட்டிக் கொண்டும், வலது கை புத்தகங்களை ஏந்திக் கொண்டும் இருக்க வேண்டும் என்கிறது. அதில் அப்படி அமர வேண்டும், நிற்க வேண்டும், நாட்டிய தோற்றம் எது என்பதையும் விவரிக்கப்பட்டு உள்ளது. நாட்டியனம் ஆடுகையில் இடது கையில் பழத்தை வைத்துக் கொண்டும் வலது கை சுகி முத்திரையைத் தந்தபடியும் இருக்க வேண்டும் என்கிறது. ரௌரவகாமா என்ற நூல் கரண்ட மகுடம் மற்றும் பூக்களைப் பற்றி விளக்கிக் கூறுகிறது. அதிலும் எப்படி அமர வேண்டும் நிற்க வேண்டும், நாட்டியத் தோற்றம் எது என்பதை விளக்கி உள்ளது (Suthanthiran, 1998).

## சோமாஸ்கந்த மூர்த்த திருவுருவ அமைப்பு

சோமாஸ்கந்தர் வடிவில் சுகாசன மூர்த்தி போன்றே சிவன் அமர்ந்திருப்பார். ஒரே ஆசனத்தில் உமையம்மையும் வீற்றிருப்பார். தேவியின் வலப்பாதம், பீடத்தின் மேல் மடங்கியவாறு கிடத்தப்பெற்றிருக்கும். இடப்பாதம் கீழே தொங்கவிடப் பெற்றிருக்கும். தேவி தமது இடக்கையில் வரத முத்திரையையும், வலக்கையில் குவளை மலரையும் கொண்டிருப்பார். தேவி எல்லா ஆபரணங்களையும் அணிந்திருப்பார். சிவப்பு ஆடை தரித்திருப்பர். கிரீட மகுடமும், முத்து மாலைகளும் அணிந்திருப்பார். இருவருக்கும் இடையே கந்தப் பெருமான் எழுந்தருளியிருப்பார். இவர் தேவியின் கழுத்தளவு இருப்பது உத்தமம். என்றும், அதற்கு குறைந்திருப்பது மத்திமம் என்றும்,

தேவியின் தன அளவு இருப்பது அதமம் என்றும் சிற்பநூல்கள் கூறுகின்றது. கந்தப்பெருமான் வீற்றிருந்தவாறு அல்லது நின்றவாறு இருப்பர். கூத்தாடுபவராகவும் அமைக்கப்பெறுவதுண்டு. ஆடை இன்றியே இருப்பர். இடக்கையில் கனியும், வலக்கையில் சுட்டும் குறிப்பும் கொண்டிருப்பர். இறைவனது முகம் தேவியின் பக்கம் சாய்ந்து இருக்கும் போல அமையப்பெற்று இருக்கும் (Ramakrishnan, 2010).

## சோமாஸ்கந்த சிற்பங்கள்

சோமாஸ்கந்தன் தன் கையில் மலர் கொத்துக்களை வைத்துக் கொண்டு இருக்கும் வகையிலான ஒரே ஒரு தோற்றத்தில்தான் உள்ளன. ராஜ சிம்மன் காலத்தைய சிற்பங்களில் முருகனின் தலையில் தலைப்பாகை உள்ளது போலவும் அதன் மீது ஒரு கிரீடம் வைக்கப்பட்டு உள்ளது போலவும் வடிவமைக்கப்பட்டு உள்ளது. அதில் "கரா" மற்றும் "மகர" குண்டலங்களைக் காதில் போட்டுக் கொண்டு இருப்பது போன்று சிற்பங்களிலும் கண்டு கொள்ளமுடிகிறது.

மாமல்லக் கோவில் சிற்பங்களில் அமர்ந்து கொண்டு இருக்கும் நிலையிலான வடிவங்களே செதுக்கப்பட்டு உள்ளன. அவருடைய உடல் அமைப்பும் முகமும் தெளிவாக உள்ள குழந்தையின் வடிவமைப்பைக் காட்டுகின்றது. நெற்றியில் உள்ள அணிகலன்கள் பிரகாசமாக தெரிவது போல் வடிவமைக்கப்பட்டு உள்ளன. "கரண்ட மகுடம்" எனும் தலைமுடி நன்கு பின்னப்பட்டு உள்ளது. சலுவான் குப்பம் குகைக் கோவிலில் உள்ள சண்முகரின் இரண்டு கைகளும் தோள்பட்டை வரை உயர்ந்து உள்ளது. ஆனால் அவருடையக் கைகளில் என்ன வைத்துக் கொண்டு உள்ளார் என்பது தெரியவில்லை. காஞ்சிபுரம் குமரக்கோட்டம் ஆலயத்தில் சோமாஸ்கந்தனைப் போன்ற வடிவமைப்பின் சில பகுதிகள் காணப்படுகின்றன.

சோழர்கள் காலத்து ஆலயங்களில் மிகச் சிறப்பானது பல்லவநீஸ்வரத்தில் உள்ள பல்லவநீஸ்வர ஸ்வாமி ஆகும். அந்தப் பெயரே அது பல்லவ மன்னர்களின் காலத்து சிலை என்பதைக் காட்டுகின்றது. பல்லவன் காலம் முதல் சோழர்கள் காலம் வரை பித்தளை உலோகத்தினால் செய்யப்பட்டு உள்ள வடிவமைப்புக்கள் ஒன்பதாம் நூற்றாண்டினைச் சேர்ந்த சோழர்களின் கலை வண்ணத்தில் உள்ளது. அவைகளில் சிவன் மற்றும் பார்வதிக்கு இடையே அமர்ந்து உள்ள முருகன் ஆழந்த யோசனையில் ஆழ்ந்தபடி தன்னை மறந்த நிலையில் காணப்படுகிறார். அது பல்லவ காலத்திய சிலை வடிவமைப்புடன் ஒத்து உள்ளது என சிவராமமூர்த்தி குறிப்பிடுகின்றார். ஸ்கந்தனின் காதுகளை "பத்திரக் குண்டலங்கள்" அலங்கரிக்கின்றன. நெற்றியில் உள்ள அணிகலன்கள் ஒவ்வொருவருடைய கவனத்தையும் இழுக்கும் வகையில் அமைந்து உள்ளன. வலது கையில் தாமரைப் பூவை வைத்து இருக்க இடது கை வரத முத்திரை தோற்றத்தை தந்தபடி உள்ளது. கழுத்தில் காணப்படும் அணிகலன்கள் அற்புதமான வடிவமைப்புடன் துல்லியமான கலை நுணுக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்து உள்ளன. கண்கள் மேல்நோக்கிப் பார்த்தவண்ணம் இருக்க கொயுரைகள், தண்டைகள் (கொலுசு), மற்றும் கணுக்காலில் உள்ள அணிகலன்களும் கலை நயம் மிகுந்து கம்பீரமாக காட்சி தரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது (Suthanthiran, 1998; John Samuel, 1998).

சோழர்கள் காலத்தைச் சேர்ந்த பித்தளை உலோகங்களில் செதுக்கப்பட்டு உள்ள சோமாஸ்கந்தனின் வடிவ அமைப்புக்கள் அவை எந்த அளவு கலை நுணுக்கமாக செய்யப்பட்டு உள்ளன என்பதற்கு எடுத்துக் காட்டாக உள்ளன. அவற்றில் உள்ள வடிவமைப்புக்கள் ஸ்கந்தனை நின்ற நிலையிலும், அமர்ந்த நிலையிலும் மற்றும் நடனமாடும் நிலையிலும் காட்டுகின்றன.

விஜயநகர காலத்திலும் நிறைய பித்தளை உலோகத்திலான சிலைகள் செய்யப்பட்டு உள்ளன. 1913 ஆம் ஆண்டு நெல்லூரில் கிடைத்த சிற்பத்தின் கலை நயம் அது விஜயநகர காலத்தை ஒட்டியது என்பதை நினைவுபடுத்தியது. அதில் ஸ்கந்தன் தன் கரங்களில் மலர்களை ஏந்தியவண்ணம் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார் என கங்கோலி குறிப்பிடுகின்றர்.

## முடிவுரை

சிவாலயங்களில் திருவிழாக்களின் போது பஞ்சமூர்த்திகள் (ஐந்து எழுந்தருளும் திருவுருவங்கள்) அருள் பாலிக்கின்றனர் கணேசர், வள்ளி தெய்வானை உடனுறை முருகர், சோமாஸ்கந்தர், அம்பிகை,

சண்டேசர். இவற்றுள் தத்துவச் சிறப்புமிகுந்த தனித்தன்மை வாய்ந்த வடிவம் சோமாஸ்கந்தர் ஆவார். இத்திருவுருவைச் சிவன் கோயில் கருவறையின் பின்பகுதித் திருச்சுற்றில், கிழக்கு நோக்கிய மண்டபத்தில் காணலாம் அல்லது தனிக்கோயிலாகவும், தனிச் சந்நிதியாகவும். திருக்கருகாவூர், வைத்தீஸ்வரன்கோவில், சிக்கல், காஞ்சிபுரம், திருக்கள்ளில் சோமாஸ்கந்தர் வடிவக் கோயில்கள் ஆகும். இலங்கையில் பஞ்ச ஈச்சரங்கள் மற்றும் ஏனைய சிவன் கோயில்களில் சோமஸ்கந்த விக்கிரங்களைக் கண்டு கொள்ளலாம். துறவறத்தைவிட இல்லறத்திலிருந்தே வீடுபேறு அடையலாம் என விளக்கும் இந்த சோமாஸ்கந்த மூர்த்தம் மனையறம், மக்கட்பேறு என்ற இரு உயரிய கருத்துக்களைக் கொண்டது. சோமாஸ்கந்தரை வழிபடுவோர் கணவனும் மனைவியுமாய் இல்லறத்தில் இணையில்லா இன்பம் துய்த்து நல்ல மகப்பேறும் குல வளர்ச்சியும் பெற்று இம்மையில் சிறந்து வாழ்ந்து மறுமையில் வீடுபேறும் அடைவர் என்பது அசைய நம்பிக்கையாக இருப்பதை அறியமுடிகிறது.

## References


John Samuel, G., (1998) The First International Conference Seminar on Skanda Murukan-1998 (An Old and Rare Book), Institute of Asian Studies, Chennai, India.

Ramakrishnan, Ira., (2010), 64 Shiva forms and Philosophical Explanations of the Ashtashta Moorthas, Narmada Publication, Chennai, India.

Subramania Sastrigal, S.S., (1984) Kandha Puranam Urpathi Kandam Yaazhapanam Paruthithurai, 3rd Edition, Kandhalagam Publsihers, Chennai, India.

Suthanthiran, V. (1998), Design of Somaskanda Murthy Statue, First International Conference Seminar on Skanda-Murukan, Chennai, India.

Thiyadian, R., (1995), Sivanarut kolangal, Sekar Pathippakam, Palani, India.

Vasantha Kumar, R., (2016) Thirumoolar Aruliya Thirumanthiram, First Edition, Panniru Thirumurai Ayivu Maiam, Karpagam Academy of Higher Education, Tamil Nadu, India.



## Funding

No funding was received for conducting this study.


## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



### Cite this Article

A. Viyasan, A study of the Somaskanda Murtham in the Hindu cultural tradition, Indian Journal of Tamil, 3(2) (2022) 6-10. https://doi.org/10.54392/ijot2222